**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**
முன்னிலை : திரு.மு.ச.ஸ்ரீநாத்.,B.A.,B.L.,(Hons.) L.L.M.,
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி**

2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 30ஆம் நாள் திங்கள்கிழமை
**அசல் வழக்கு எண்.736/2010**
**CNR No.TNCB-13000048-2010**

1. K.N.வடிவேலு (இறந்துவிட்டார்)
2. கோபால் (என்கின்ற) K.N.கோபாலன் (இறந்துவிட்டார்)
3. N.பாலசுப்ரமணியன்
4. N.சந்திரன்
5. ராஜாமணி (இறந்துவிட்டார்)
6. கோமதி
7. சிவக்குமார்
8. பாஞ்சாலி
9. பாரதி
10.சாந்தி
11. ரேவதி
12. ஆனந்தகுமார் ... வாதிகள்

/ எதிர் /

1. நாச்சம்மாள்
2. மாரியம்மாள்
3. K.கௌசல்யா (இறந்துவிட்டார்)
4. K.அருணாதேவி
5. K.நாச்சிமுத்து
7. கார்த்திகாதேவி ... பிரதிவாதிகள்

(Amended as per order in I.A.No.3/19, dated 12.03.2019)
(Amended as per order in I.A.No.4/21, dated 26.03.2021)
(Amended as per order in I.A.No.12/25, dated 04.07.2025)

இவ்வழக்கானது கடந்த 15.11.2010 தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு 18.11.2010 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு 25.03.2026 தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வாதிகள் தரப்பில் வழக்கறிஞர்

திரு.K.P.சண்முகம் அவர்கள் முன்னிலையாகியும், 1 மற்றும் 4ம் பிரதிவாதிகள் தோன்றாத்தரப்பினர்கள் ஆக்கப்பட்டும், 2ம் பிரதிவாதி தரப்பில் திரு.S.செந்தில்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 5ம் பிரதிவாதி திரு.K.நாச்சிமுத்து அவர்கள் சுயவழக்காடியாக ஆஜராகியும், 3ம் பிரதிவாதி இறந்துவிட்ட நிலையில் 6 மற்றும் 7 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.B.குமார் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரை எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**தீர்ப்புரை**

தாவா சொத்துக்களை நலந்திகடு கலந்து ஐந்து (5) சம பாகங்களாக பிரித்து, வாதிகளுக்கு தலா ஐந்தில் ஒரு (1/5) பாகமாக அவர்தம் தனித்த சுவாதீனத்தில் கொடுத்திட வேண்டுமாயும், மற்றும் இன்னபிற பரிகாரங்கள் வழங்கிட வேண்டியும் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை VII விதி 1ன்கீழ் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) வழக்குரையின் சுருக்கம் :**

(2.1) வாதிகள் அனைவரும் மற்றும் 1, 2-ம் பிரதிவாதிகளின் கணவரும், 3, 4, 5-ம் பிரதிவாதிகளின் தகப்பனாருமான (அமரர்) K.N.கிருஷ்ணசாமி கவுண்டரும், உடன் பிறந்த ஒரு தாய் வயிற்று மக்கள் ஆவார்கள். 1ம் பிரதிவாதியானவர் K.N.கிருஷ்ணசாமி கவுண்டரின் மூத்த மனைவி ஆவார். 2ம் பிரதிவாதியானவர் K.N.கிருஷ்ணசாமி கவுண்டரின் இளைய மனைவி ஆவார். 3, 4, 5ம் பிரதிவாதிகள் 2ம் பிரதிவாதியின் ஆண், பெண் மக்களாவார்கள்.

வாதிகளுக்கும் இறந்த K.N.கிருஷ்ணசாமி கவுண்டருக்கும் பொதுவில் பாத்தியப்பட்ட தாவாச் சொத்துக்களானது கொண்டம்பட்டி கிராமம், க.ச.பண்.247/1 (பகுதி) நெ.புலத்தில் பு.ஏ.0.50 செ.பூமி வகையறாச் சொத்துக்களாகும். தாவாச் சொத்துக்களானது வாதிகள் மற்றும் 1, 2ம் பிரதிவாதிகளின் கணவரும் 3, 4, 5ம் பிரதிவாதிகளின் தகப்பனார் (லேட்) K.N.கிருஷ்ணசாமி கவுண்டருக்கும் சேர்ந்து விக்கிரய சுயார்ஜிதப்படி வந்தடைந்த சொத்துக்களாகும்.

(2.2) கடந்த 13.10.2004-ம் தேதியில் மேற்படி வாதிகளின் உடன்பிறந்த சகோதரரும், 1, 2ம் பிரதிவாதிகளின் கணவரும், 3, 4, 5-ம் பிரதிவாதிகளின் தகப்பனாருமான K.N.கிருஷ்ணசாமி இறந்துவிட்டார். அதற்குப்பின்னிட்டு, தாவாச் சொத்துக்களுக்கு கூட்டுப்பட்டா பெயர் மாறுதலுக்கு பொள்ளாச்சி வட்டாட்சியர் சமூகத்தில் வாதிகள் சேர்ந்து மனு செய்து கொண்டதற்கு, தற்கால பொள்ளாச்சி மாவட்ட முன்சீப் கோர்ட்டார் அவர்களின் சமூகத்தில் பிரதிவாதிகள் அனைவரும் சேர்ந்து மேற்படி 1ம் பிரதிவாதி நாச்சம்மாள் அவர்களுக்கு எதிராக, மேற்படியார் (லேட்) K.N.கிருஷ்ணசாமி அவர்களின் முதல் மனைவி இல்லை என்று விளம்புகை பரிகாரம் கோரி தொடர்ந்த அசல் வழக்கு எண்.470/2006 நிலுவையில் உள்ள காரணத்தின் அடிப்படையில் மேற்படி வழக்கு முடிவுக்கு பின்னிட்டு பட்டா மாறுதல் கோரி வாதிகள் விண்ணப்பிக்க வேண்டுமாய் உயர்திரு பொள்ளாச்சி வட்டாட்சியர் சமூகத்தால் வழங்கப்பட்டுள்ளது.

(2.3) 2-ம் பிரதிவாதிகளின் கணவரும் 3, 4, 5-ம் பிரதிவாதிகளின் தகப்பனாருமான (லேட்) கிருஷ்ணசாமியின் ஆயுட்பரியந்தத்தில் பலமுறை பஞ்சாயத்தார் முன்னிலையில் பாகக்கறார் பைசல்கள் பேசப்பட்டும், வாதிகள் மற்றும் லேட் கிருஷ்ணசாமி இவர்களுக்குள் மேற்படி தாவா சொத்துக்களை

நலந்திகடு செய்து பாகசாசனம் செய்து கொள்ள நல்லதொரு முடிவு ஏற்படவில்லை. மேலும் பஞ்சாயத்தார்களிடம் கொடுத்து வைத்திருந்த தாவா சொத்துக்களின் அசல் பத்திரம் மற்றும் இதர சொத்துக்களின் அசல் பத்திரங்களையும் (லேட்) கிருஷ்ணசாமி வாங்கி கொண்டு, தாவா சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்களை நலந்திகடு செய்து பாகசாசனம் செய்து கொள்வது தொடர்பாக வக்கீல்களின் கருத்துரு வேண்டி அலைந்து வந்து விபத்தில் மரணமடைந்துவிட்டார். அசல் பத்திரங்கள் அனைத்தும் 5–ம் பிரதிவாதியிடம் தற்காலம் உள்ளதாக பஞ்சாயத்தார் கூறுகின்றார்கள். இதன் காரணமாகவே மேற்படி தாவா தொடர்பாக பிரதிவாதிகளுக்கு வக்கீல் அறிவிப்பு செய்யப்படவில்லை.

(2.4) 2, 3, 4, 5–ம் பிரதிவாதிகள் கிருஷ்ணசாமியின் மறைவிற்கு பின்னிட்டு, மேற்படி 1–ம் பிரதிவாதிக்கு தாவா சொத்துக்களில் எவ்வித ஏற்பாடுகளும் செய்து வைக்க 2, 3, 4, 5 பிரதிவாதிகள் இதுகாறும் முன்வரவில்லை. பின்னிட்டும் 2ம் பிரதிவாதியானவர் 4ம் வாதிக்கு எதிராக மேற்படி தாவா சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்களில் ஐந்தில் ஒரு பங்கு பொது பாத்தியத்தில் அடமானக்கடன் முதன்மை டிகிரி வேண்டி சமூகம் பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.15/2010–ன்படி தாவா தொடர்ந்து மேற்படி தாவா விசாரணையில் நிலுவையில் உள்ளது. பின்னிட்டு 5–ம் பிரதிவாதியானவர் தன்னையும், தனது மனைவியையும் 4–ம் வாதி மற்றும் ஷையார் மனைவி, மகன் தாக்கியதாக கிணத்துக்கடவு காவல் சரகம் முதல் தகவல் அறிக்கை எண்.354/2020–ன்படியும், பொள்ளாச்சி நடுவர் எண்.1 கோர்ட்டில் கிரைம் எண்.354/2010–ன்படி வழக்கு தொடர்ந்து மேற்படி வழக்கு விசாரணைக்காக நிலுவையில் உள்ளது.

(2.5) 5–ம் பிரதிவாதியானவர் வாதிகள் மற்றும் 4–ம் வாதியின் மனைவி, மகன் உள்ளிட்டும் 2, 3, 4–ம் பிரதிவாதிகள் உள்ளிட்டும் வாதிகள் மற்றும் (லேட்) K.N.கிருஷ்ணசாமி இவர்களின் மூத்த சகோதரி K.M.சிவகாமி, க/பெ.முனுசாமி ஆகியோர்களுக்கெதிராக சமூகம் பொள்ளாச்சி மாவட்ட முன்சீப் கோர்ட்டு அசல் வழக்கு எண்.350/2010–ன்படி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டியும் மேற்படி வழக்குல் ஐ.ஏ.எண்.792/2010ன்படி இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டியும் வழக்கு தொடர்ந்து மேற்படி வழக்கும் விசாரணையில் நிலுவையில் உள்ளது.

(2.6) வாதிகள் மற்றும் அவர்களுடைய சகோதரி சிவகாமியும் சேர்ந்த பிரதிவாதிகளுக்கு எதிராக பொள்ளாச்சி வட்டம், கொண்டம்பட்டி கிராமம், நத்தம் பழைய சர்வே நெ.247/C, நத்தம் புதிய சர்வே நெ.480/3–க்கு பட்டா எண். 454–க்கு கட்டுப்பட்ட 680 ச.மீ.சிதிலமான குடியிருப்பு வகையறா சொத்துக்களில் தங்களுக்குண்டான பங்கு பாத்தியதைகள் கோரி சமூகம் பொள்ளாச்சி மாவட்ட முன்சீப் கோர்ட்டு அசல் வழக்கு எண்.417/2010–ன்படி தாவா தொடர்ந்து அதுவும் நிலுவையில் உள்ளது. இதன் காரணமாகவே, தாவா சொத்துக்களை நலந்திகடு கலந்து வாதிகளுக்கு நபர் ஒன்றுக்கு ஐந்தில் ஒரு பங்கு (1/5) வீதமும், பிரதிவாதிகளுக்கு சேர்ந்து ஐந்தில் ஒரு பங்கு (1/5) ஆகவும் பிரித்து தருமாறு இந்த தாவா தொடரப்பட்டுள்ளது.

3) **<u>2–ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையின் சுருக்கம்:</u>**

(3.1) வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கானது பொய்யானதும், அடிப்படையற்ற சங்கதிகளைக் கொண்டதும் ஆகும். வாதிகள் கோரியுள்ள தாவா பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதில்லை. வாதிகள் பிராதின் 2–ம் பாராவில் கூறியுள்ள சங்கதிகள் பொய்யாகும். இந்த 2–ம் பிரதிவாதி இறந்து

போன கிருஷ்ணசாமியின் சட்டப்பூர்வமான மனைவியாவார், மற்ற 3, 4, 5, 6, 7 ம் பிரதிவாதிகள் மேற்படி கிருஷ்ணசாமியின் சட்டபூர்வ வாரிசுதாரர்கள் ஆவார்கள். முதல் பிரதிவாதியானவர் K.N. கிருஷ்ணசாமியின் மனைவி அல்லாதவர் மற்றும் லேட் மணி த/பெ முத்துசாமிக் கவுண்டர் என்பவரின் சட்டப்படியான மனைவியாவார். எக்காலத்திலும் 1-ம் பிரதிவாதிக்கு K.N.கிருஷ்ணசாமியின் சொத்திற்கும் பாத்தியதைக்கும் உரிமையில்லை. வாதிகள் லேட் K.N. கிருஷ்ணசாமியின் சொத்தை சட்டப்படியான இந்த 2 முதல் 7 வரையுள்ள வாதிகள் அனுபவித்து விடக்கூடாது என்ற கெட்ட நோக்கில் முதல் பிரதிவாதியை இந்த வழக்கில் சேர்த்தும் 1-ம் பிரதிவாதியிடம் முறையற்ற வகையில் ஆவணங்களை எழுதி மோசடியாக சொத்தை அடையும் முயற்சியே மேற்படியான செயல் ஆகும்.

(3.2) தாவா சொத்து லேட் கிருஷ்ணசாமி அவரது சொந்த உழைபபால் பெற்றத் தொகையினை வைத்து கிரையத்திற்கு கொடுத்து விலை பேசினார். மேலும் K.N. கிருஷ்ணசாமியிடம் மேற்படி வாதிகள், தங்களுக்கும் சேர்த்து சொத்து வாங்கும்படியும் சொத்தில் பின்னாளில் அந்த பங்குக்குரிய கிரையத் தொகையை அளிப்பதாகவும் உறுதிமொழி செய்து எழுதிக் கொடுத்தனர். ஆனால் மேற்படி வாதிகள் K.N. கிருஷ்ணசாமி உயிருடன் இருந்தவரை எந்தவித சொத்திற்கான உரிமையும் கோரவில்லை மற்றும் தாவாசொத்தில் K.N. கிருஷ்ணசாமிக்கு மட்டும் தான் என ஒப்புக் கொண்டு அதன்படி நடந்தனர். தாவாச் சொத்தினை கிரையம் பெறும் பொழுது பின்னாளில் கிரையத் தொகை கொடுப்பதாக மேற்படி வாதிகள் சொன்னதால் மட்டும் கிரையம் 5 பேர் பெயரில் ஆனது. அதுவும் பெயரளவிற்கே ஆனது. மேற்படி கிரையத்திற்கான தொகை ரூ.50000/-(ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) முழுத் தொகையினை வைத்து வாங்கப்பட்டது. மற்றபடி எவ்வித தொகையும் கிரையத்திற்காக வாதிகள்

செலவிடவில்லை என்பதே உண்மை.

(3.3) தாவா சொத்தினை K.N. கிருஷ்ணசாமி விலைக்கு வாங்கும்பொழுது 3–ம் வாதி மத்திய சுங்க அரசு அதிகாரியாக இருந்தார். அவர் தான் சொத்து வாங்குவதாயிருந்ததால் அன்று அரசாங்கத்திடமிருந்து உரிய அனுமதி பெற்றே வாங்கியிருக்க முடியும் மற்றும் முதல் வாதி இந்த தாவாச் சொத்தினை வாங்க எவ்வித தொகையும் அவர் செலுத்தவில்லை ஏனென்றால் கிரைய தேதிக்கு K.N. கிருஷ்ணசாமியே ரூ.50,000/– முழுத் தொகையும் தன் கையில் இருந்து 1 –ம் நபர் கையில் மூத்தவர் என்ற மரியாதை அடிப்படையில் கொடுத்து வைத்தார். ஒரு போதும் 2–ம் வாதியோ அதுபோல 4–ம் வாதியோ எவ்வித தொகையும் சொத்தின் கிரையத்திற்கு ஒரு ரூபாய் கூட கொடுக்கவில்லை. மேற்படி சொத்தினை விலைக்கு பெற 3–ம் வாதி அரசாங்கத்திடம் அனுமதி பெற்றிருந்தால் நீதிமன்றத்தில் அதை தாக்கல் செய்தும் தொகை செலவு செய்ததை எல்லா வாதிகளும் நிரூபிக்க வேண்டியது அவரவர்கள் கடமையாகும்.

(3.4) பிராதின் 5, 6– பாராக்களில் சொல்லியுள்ள அனைத்து சங்கதிகளும் பொய்யாகும். தாவாச் சொத்தினை வாதிகள் கூட்டாகவும் அனுபவிக்கவில்லை சொத்தை வாங்கவும் வளர்ச்சி ஏற்படுத்தவும் எந்தவித உழைப்பையும் தொகையும் செலுத்தவில்லை வாதிகள் கிரையத்தின்போது சொன்னபடி ஒவ்வொரு தனித்தனியாக தனக்குண்டான கிரையத் தொகையை K.N.கிருஷ்ணசாமிக்கு செலுத்தி தங்களது பெயரில் சொத்தினை கேட்டுப்பெறவில்லை பின்னாளில் கிரையம் வாங்கி மூன்று வருடம் கழித்து எவ்வித உரிமையும் வாதிகள் கோராத நிலையில் K.N. கிருஷ்ணசாமி அவரது சொந்த உழைப்பால் மேற்படி தாவாச் சொத்தில் பல லட்சம் செலவு செய்து மாடர்ன் ரைஸ்மில் உருவாக்கி அதற்குரிய அனைத்து கட்டுமானங்களையும் செய்தார். இதுவே உண்மை மற்றபடி வாரிசு விருதாப்பியப்படி வாதிகளுக்கோ 1–ம் பிரதிவாதிக்கோ இந்த சொத்தில் எவ்வித

உரிமைகளும் இல்லை.

(3.5) மேலும் இந்த 2–ம் பிரதிவாதி தெரிவிப்பது என்னவென்றால், 2–ம் பிரதிவாதி வாதிகளின் பட்டா பெயர் மாற்ற மனுவிற்கு ஆட்சேபனை தெரிவித்தார். இதனால் வாதிகள் தாவாச் சொத்தின் உரிமைக்கு அப்பாற்பட்டவர் என்பதையும் எந்த விதத்திலும் உரிமை கோர அருகதையில்லை என்பதையும் வருவாய்துறையிடம் கூறியதால்தான் பட்டா பெயர் மாற்றம் செய்யவில்லை. இந்த பிரதிவாதிக்கு தெரியாமல் பட்டா பெயர் மாற்றம் செய்ய வாதிகள் செய்த செயல் மிகவும் மோசடியானது ஆகும். இதனாலேயே பட்டா பெயர் மாற்ற மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

(3.6) மேலும் வாதிகள் தங்களது பிராதில் 11–ம் பாராவில் கூறியுள்ள அனைத்து விஷயங்களும் பொய்யாகும் எந்த ஒரு பேச்சு வார்த்தையும் பாக கறார் விஷயங்களும் வாதிகளுடனோ, இறந்து போன K.N.கிருஷ்ணசாமி அவர்களிடமோ பேசவில்லை. வாதிகள் பொய்யான ஒரு கூற்றினை பிராதில் தெரிவித்துள்ளனர். மற்றபடி கிரையத் தொகை முழுவதையும் K.N.கிருஷ்ணசாமியும் 2–ம் பிரதிவாதியும் செலுத்தி தங்களுக்கு உரிமை பாத்தியப்பட்ட ஆவணத்தினை பதிவு செய்து தங்கள் வசமே வைத்திருந்தனர் மற்றும் சொந்த சுய ஆர்ஜித சொத்தாகவே ஆண்டு அனுபவித்து வந்தனர். எதற்காகவும் எங்கேயும் கருத்துரு கேட்டு ஆவணங்களை எடுத்து செல்லவில்லை அதேபோல் மேற்படி சொத்தில் எவ்வித உரிமையும் வாதிகளுக்கு இல்லாததால் தான் பிரதிவாதிகள் வாதிகளுக்கு சொத்துரிமை குறித்து எவ்வித ஏற்பாடுகளும் செய்து வைக்க அவசியமில்லை மற்றும் முன் வரவில்லை.

(3.7) மேலும் வாதிகள் பிராதின் மற்ற பாராக்களில் கூறியுள்ள அனைத்து

சங்கதிகளும் பொய்யாகும். தாவாச் சொத்தானது K.N. கிருஷ்ணசாமி அவர்களுக்கும் 2–ம் பிதிவாதிக்கும் முழுக்க முழுக்க பாத்தியப்பட்டதாகும். மற்றும் லேட் M.நாச்சிமுத்துக் கவுண்டர் உயிருடன் இருந்தபோதே மற்ற வாதிகளையும் வாதிகளின் தாயார் அங்கமாள் அவர்களையும் வைத்து ஸ்ரீ தண்டாயுதபாணி ரைஸ்மில் சொத்துக்கள் வகையறா அனைத்தும் தனது மகன் K.N. கிருஷ்ணசாமி மட்டும் உரியது என முடிவெடுத்து உயில் சாசனம் எழுதி வைத்தார் அதன்படியே O.S.417/2010 வழக்கு சொத்து K.N கிருஷ்ணசாமிக்கு மட்டும் பாத்தியப்பட்டதாகும் மேலும் லேட் M.நாச்சிமுத்து கவுண்டர் சிறுவயதிலிருந்தே இளம்பிள்ளை வாதத்தால் நடக்க இயலாது இருந்தார். மேற்படி வாதிகள் எந்த உதவியும் மேற்படியாருக்கு செய்ததில்லை மற்றும் இந்த 2–ம் பிரதிவாதியே எல்லா பணிவிடைகளையும் அவர் இறக்கும் வரை செய்து கவனித்துக் கொண்டார்.

(3.8) மேலும் 2–ம் பிரதிவாதி தெரிவிப்பது என்னவென்றால் மேற்படி நாச்சிமுத்து கவுண்டர் உயிருடன் இருக்கும் காலத்திலேயே K.N. கிருஷ்ணசாமியின் உழைப்பால் உண்டான தொகைகளை வைத்து வாதிகளுக்கு அவரவர்களது பெயரில் பூமி, வீடு, மனையிட சொத்துக்கள் என நிறைய வாங்கி தந்தார். மேற்படி நாச்சிமுத்து கவுண்டரின் அறிவுரையிலேயே மேற்படி அனைத்தும் நடந்தது. அவர் இறந்த பின்பும் 1981–ம் வருடம் இந்த தாவா சொத்து வாங்கும் முன்பே வாதிகளின் சகோதரி சிவகாமி அவர்களுக்கும் மற்ற வாதிகளுக்கும் இறந்து போன K.N. கிருஷ்ணசாமி மனையிட சொத்துக்களில் விலைக்கு பேசி கிரையம் செய்து கொடுத்தார். மேற்படி சொத்துக்கள் கிணத்துகடவு யூனியன் ஆபிஸ் எதிரில் உள்ளது. இவையெல்லாம் இந்த 2–ம் பிரதிவாதி மற்றும் இவரது கணவர் K.N. கிருஷ்ணசாமி ஆகியோரின் முழு உழைப்பு மற்றும் வருமானத்தைக் கொண்டு வாங்கிக் கொடுக்கப்பட்டவையாகும்.

(3.9) தாவா சொத்தில் வாதிகள் எவ்வித பங்கு பாத்தியதையும், உரிமையும் கோர அருகதையில்லை மற்றும் சொத்திற்கு எவ்விதத்திலும் உரிமையற்றவர்கள். பெயரளவிற்கே இந்த தாவா சொத்து 5 நபர்கள் மீது கிரையம் எழுதப்பட்டது. குறித்த வகை நிவாரண சட்டப்படி வாதிகள் கடந்த 1981–ம் வருடம் கிரையம் பெறும் பொழுது ஏற்பட்ட உடன்படிக்கை (உறுதிமொழியின்படி) 3 வருட காலத்திற்குள் ஏற்றதை ஆற்றுக பரிகாரத்தின் கீழ் சொத்திற்கான கிரையத் தொகையை உரிய காலத்தில் செலுத்தி நான்கு வாதிகளும் அவர்கள் கோரும் இடத்தினை கிரையம் செய்து கொள்ளவில்லை. இவ்வாறாக கால வரையறை சட்டப்படி குறித்த வகை நிவாரண சட்ட கோரிக்கைகள் வழக்குகள் இது நாள் வரையில் தாக்கல் செய்யாததால் வாதிகள் எவ்விதத்திலும் தாவா சொத்தினை உரிமை கோர அருகதையற்றவர்கள். எனவே வாதிகள் தாக்கல் செய்துள்ள தாவாவானது சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல என்றும் தாவா சொத்துக்கள் 2–ம் பிரதிவாதிக்கும் மற்ற அடுத்துள்ள பிரதிவாகளுக்குமே பாத்தியப்பட்டது என்றும் தாவாவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டுகிறார்.

**4) <u>5–ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையின் சுருக்கம்: (6, 7 பிரதிவாதிகளால் குறிப்பாணைப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டது)</u>**

(4.1) வாதிகள் தாக்கல் செய்துள்ள நியாயப்படிக்கும் நிலைக்கதக்கதல்ல. வாதிகளின் தாவா பொய்யானதும் கற்பனையுடையதும் ஆகும். வாதிகள் இந்த தாவாவை காலம் கடந்து தாக்கல் செய்துள்ளதால் காலவரையறை சட்டப்படி செல்லதக்கதல்ல. தாவாவில் ஐந்தாம் பிரதிவாதி வெளிப்படையாக ஒப்புக் கொள்ளப்பட்ட சங்கதிகள் தவிர மற்ற அனைத்தையும் வாதிகள் முற்றிலும் நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். வாதிகள் தாவா சொத்தின்

சுவாதீனத்தில் ஒரு போதும் இல்லை என்றும் கடந்த 1981 முதல் இன்று வரையும் ஐந்தாம் வாதி அவரது தகப்பனார் இறந்து போன K.N. கிருஷ்ணசாமி அவர்களுக்கு பின்னிட்டும் மேற்படி வாதிகளின் அறிவுக்கு எட்டிய வரையில் கடந்த 25 வருடங்களாக எவ்வித இடையூறுமின்றி சுத்த சுவாதீனத்தில் இன்று வரையும் அனுபவித்து வருகின்றனர்.

(4.2) தாவா சொத்தானது 55 செண்ட் பரப்பளவு உடையது. மற்றும் தாவா சொத்தினை இறந்து போன 5ம் பிரதிவாதியின் தகப்பனார் தான் உயிருடன் இருந்த பொழுது அவரது தகப்பனார் திரு M. நாச்சிமுத்துக் கவுண்டர் கடந்த 03.01.1979 ம் தேதி எழுதி வைத்திருந்த உயில் சாசனப்படி பாத்தியப்பட்டு அனுபவித்து வந்த ஸ்ரீ தாண்டாயுதபானி ரைஸ் அண்டு ஆயில் மில்ஸ் சொத்தின் சுயராஜித சம்பாதியத்தின் மூலம் இந்த தாவா சொத்தினை கடந்த 26.11.1981 ம் தேதியில் 1264/1981 ம் வருட ஆவணமாக கிரையம் வாங்கப்பெற்றார். இந்த தாவா சொத்தினை மேற்படி K.N. கிருஷ்ணசாமி அவர்கள் தனது சொந்த உழைப்பின் மூலம் பெற்ற பண ஆதாயத்தின் அடிப்படையில் கிரையம் பெறும் பொழுது வாதிகளான மேற்படி நால்வரும் தங்களுக்கும் சேர்த்து கிரையம் வாங்கும்படியும் கிரையத் தொகையை மேற்படி வாதிகள் அனைவரும் பின்னிட்டு மேற்படி K.N. கிருஷ்ணசாமி அவர்களிடம் அளித்து செல் இரசீது பெற்று பின்னிட்டு அவரவர்கள் பெயரில் தனித்தனியாக பத்திரம் செய்து கொள்வதாக அளித்த உறுதியின் பெயரில் மேற்படி K.N. கிருஷ்ணசாமி வாதிகள் மற்றும் அவரது பெயரில் கிரையம் பெற்றார்.

(4.3) வாதிகள் அனைவரும் தாங்கள் அளித்த உறுதியின் படி மேற்படி K.N.கிருஷ்ணசாமி அவர்களிடம் தங்களுக்காக வாங்க பெற்ற கிரையத்தை அதற்குரிய கிரையத் தொகையை கொடுத்து எவ்வளவு நிலப்பரப்பு வேண்டுமோ

அதற்குரிய கிரையப் பத்திரத்தை அவரவர்கள் செய்து கொள்ள முன் வரவில்லை. இந்நிலையில் மேற்படி K.N.கிருஷ்ணசாமி அவர்கள் தனது சுயராஜ்ஜித சொத்தினை வளர்ச்சி ஏற்படுத்தும் நோக்கத்தில் ரூ.2,50,000/– செலவில் காம்பவுண்ட் சுவரினை எழுப்பி கடந்த 25 வருடங்களாக 2004 வரையில் அனுபவித்து வந்து அவரது மகனான K. நாச்சிமுத்து அவர்களுக்கு 25.08.2004 ம் தேதியில் ஒரு உயில் சாசனம் எழுதி வைத்தார்.

(4.4) மேற்படி தாவா சொத்து தவிர ஸ்ரீ தண்டாயுதபானி ரைஸ் அண்டு ஆயில் மில்ஸ் சொத்தும் மேற்படி உயில் சாசனப்படி 5ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டதாகும். அதற்குரிய வழக்குகள் வாதிகளால் இம்மாண்புமிகு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் – 417/2010ம் மற்றும் 5ம் பிரதிவாதியால் நிரந்தர உறுத்துக்கட்டளை வழக்கு அசல் வழக்கு எண் – 350/2010 ம் நிலுவையில் உள்ளது. இந்நிலையில் பிராதில் சொல்லியுள்ளபடி நான்காம் வாதி ஒரு போதும் தாவா சொத்திலும் மற்ற ஐந்தாம் வாதிக்கு பாத்தியப்பட்ட எந்த சொத்திலும் குறிப்பிட்டோ ஒரு பகுதியிலோ எந்த இடத்திலும் சுவாதீனத்தில் இல்லை. ஒன்றாம் வாதியானவர் தனது தகப்பனார் நாச்சிமுத்துக் கவுண்டர் உயிருடன் இருக்கும் பொழுது அவருக்கு திருமணம் நடந்து 1963ல் இந்து குடும்ப உறுப்பினராக இல்லாமல் வெளியேறி விட்டார். இரண்டாம் வாதியானவர் 1965ல் தனது திருமணத்தை முடித்துக் கொண்டு இந்து குடும்ப உறுப்பினராக இல்லாமல் வெளியேறி விட்டார். மேற்படி மூன்றாம் வாதி இந்திய சுங்க இலாகாவில் பணியாற்றுவதால் அவரும் தனது பணி உத்தரவு கிடைத்த நாள் முதல் வெளியூரில் வாழ்ந்து வருகிறார்.

(4.5) நான்காம் வாதியானவர் மேற்படி M. நாச்சிமுத்து கவுண்டர் அவர்கள் உயிருடன் இருக்கும் பொழுது செல்லப்பிள்ளையாக வளர்ந்து நாளடைவில்

கல்லூரி வாழ்க்கையில் ஊதாரிதனமாக சுற்றி கடன் பட்டு அனைத்து தொழில்களையும் செய்து நஷ்டம் அடைந்து ஐந்தாம் வாதியின் தகப்பனார் K.N. கிருஷ்ணசாமி அவர்களின் நிழலில் வாழ்ந்து அவரின் வாரிசான ஐந்தாம் பிரதிவாதிக்கு எவ்வித சொத்தும் கிடைக்கப்பெறக்கூடாது என்பதற்காகவும் மேலும் ஒன்றாம் பிரதிவாதியான சம்பந்தமில்லாத ஒரு லேட் மணி அவர்களின் மனைவியை இவ்வழக்கில் சேர்த்து சொத்தினை அபகரிக்கும் கெட்ட எண்ணத்தில் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

(4.6) மேற்படி தாவா சொத்தினை குறித்து கடந்த 30 வருடங்களாக ஐந்தாம் பிரதிவாதி எவ்வித இடையூறும் இன்றி 1 முதல் 3 வரையுள்ள வாதிகளால் ஆட்சேபணையின்றி அனுபவித்து வருவதை ஏற்றுக் கொள்ள முடியாத நான்காம் வாதி மற்ற வாதிகளை வழுக்கட்டாயத்தின் பேரில் இந்த தாவா சொத்திற்கு வழக்கிற்காகவும் மாறுதல்காகவும், அழைத்து பட்டா மாறுதல் செய்ய முயன்று மோசடியாக பெயர் மாற்றம் ஏற்படுத்தும் செயல்பாட்டில் இருந்ததால் தாசில்தாரர் சமூகம் அத்தகைய மனுவினை நீதிமன்றம் மூலம் உத்தரவு பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தினர் இதனால் பட்டா மாறுதல் அடைந்து சொத்தினை அவர்களது வருவாய் ஆவணங்களுக்கு உட்படுத்த முயன்று முயற்சி தோல்வியுற்றதால் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளனர். இதன் உண்மை பிராதின் ஆவணம் 3 ல் இருந்து தெரிய வருகிறது. மேலும் இந்த தாவானது தாவா மதிப்பீட்டு சட்டப்படி தாக்கல் செய்யாமல் பொய்யான மதிப்பின் பெயரில் குறைந்த அளவு நீதிமன்ற கட்டணத்தினை செலுத்தி தங்களுக்குரிய பரிகாரத்தை பெறும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதால் இவ்வழக்கானது நிலைக்கதக்கதல்ல. எனவே, வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும்.

5) **<u>5ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட கூடுதல் எதிர்வழக்குரையின் சுருக்கம்:</u>**

(5.1) வாதியின் தாவா பொய்யும், மோசடியானது ஆகும். சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. தாவா பிராதில் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளைத்தவிர பிறவற்றை இந்த பிரதிவாதி வன்மையாக மறுக்கின்றார். அவற்றை வாதியே கண்டிப்பாக நிரூபிக்க வேண்டியது. தாவாவில் திருத்தப்பட்ட பிராதின் 2 வது பத்தியில் கூறியுள்ள சங்கதிகள் பொய்யாகும். 1ம் பிரதிவாதியை தவறான உள் நோக்கத்துடன் வாதிகள் தரப்பினராக சேர்த்து கூட்டு சதி செய்துள்ளனர். 1ம் பிரதிவாதியை வைத்து தாவா சொத்தினை மோசடியாக உரிமை பெற முயற்சித்துள்ளனர். மேற்படி 1 ஆம் பிரதிவாதி இறந்துபோன லேட் மணி த/பெ முத்துச்சாமி கவுண்டர் என்பவரின் மனைவி ஆவார். காலம் சென்ற லேட் கிருஷ்ணசாமி த/பெ நாச்சிமுத்து கவுண்டர் இவருக்கும் 1ம் பிரதிவாதிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. எவ்வித வாரிசு உரிமையும் 1ம் பிரதிவாதிக்கு இல்லை 2 முதல் 7 வரை உள்ள பிரதிவாதிகள் காலம் சென்ற கிருஷ்ணசாமியின் வாரிசுதாரர்கள் ஆவார்கள்.

(5.2) திருத்தப்பட்ட பிராதின் 4வது பத்தியில் சொல்லியுள்ள அனைத்து சங்கதிகளும் பொய்யாகும். தாவா சொத்தானது முழுக்க முழுக்க லேட் கிருஷ்ணசாமி அவர்களின் சுயசம்பாத்தியத்தின் மூலம் விலைக்கு பேசி கிரயம் பெற்ற பூமி சொத்து ஆகும். மேலும் பூமி சொத்துக்களை 1981 முதல் 1986 வரை சுமார் 20,00,000 வரை செலவு செய்து மாடர்ன் ரைஸ் மில்லாக உருவாக்க வளப்படுத்தி உள்ளார். அதற்காக மிகுந்த உழைப்பினையும் திறமையினையும் நிதி ஆதாரத்தையும் முதலீடு செய்துள்ளார். ஒருபோதும் வாதிகள் தங்களது தொகையினை ஒரு ரூபாய் கூட எதற்காகவும் தாவா சொத்து வாங்குவதற்கும்,

மேம்படுத்துவதற்கும் செல்விடவில்லை. மற்றும் தாவா சொத்து வாதிகளுக்கு பொதுச் சொத்து அல்ல மற்றும் கூட்டு உரிமையும் இல்லை எவ்வித அனுபோகமும் உரிமையும் வாதிகளுக்கு அறவே கிடையாது. எவ்விதத்திலும் பங்கு பாத்தியதைகள் வாதிகளுக்கு இல்லை. மற்றும் வாதிகளுக்கு எவ்விதத்திலும் சுயராஜ்ஜித வகையிலும் பாத்தியப்படாத ஒன்றாகும். வாதி பிராதில் கூறியுள்ள அனைத்து சங்கதிகளையும் முற்றிலும் நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மேலும் பிராதில் 6 ஆம் பத்தியில் கிருஷ்ணசாமி அவர்களின் குடும்ப கிளை குறித்து கூறியுள்ள சங்கதிகள் முற்றிலும் பொய்யானதாகும். 2வது பத்தியின் பதிலையே மேற்படி 6ம் பத்திக்கு பதிலுரையாக தெரிவிக்கிறார்.

(5.3) மேலும் வாதியின் திருத்தப்பட்ட பிராதில் 7ம் பத்தியில் சொல்லியுள்ளதுபோல் கூட்டு கிரயம் ஒருபோதும் கிருஷ்ணசாமி அவர்களுக்கு ஏற்படவில்லை. மாறாக தாவா சொத்து கிரயத்தின் பொழுது எவ்வித தொகையும் வாதிகள் செலுத்தாததால் பின்னாளில் குறிப்பிட்ட காலத்தில் செலுத்தி அவரவர்களுக்கு தனிப்பத்திரம் ஏற்படுத்தி கொள்ளவில்லை. இந்நிலையில் லேட் கிருஷ்ணசாமி 1985 ஆம் வருடம் மாடர்ன் ரைஸ் மில்லை உருவாக்கும் பொருட்டு கட்டுமானம் செய்தார். அதற்காக பெரும் அளவு தொகைகளை செலவு செய்துள்ளார். மற்றபடி பிராதின் 9 வது, 11 வது பத்தியில் சொல்லியுள்ள அனைத்து சங்கதிகளும் பொய்யாகும்.

(5.4) மேலும் இந்த 5ம் பிரதிவாதிக்கு காலம் சென்ற லேட் கிருஷ்ணசாமி அவர்கள் அவரின் சொந்த சுயராஜ்ஜித சொத்தாகவே தாவா சொத்தினை கருதி 25/08/2004ல் ஒரு உயில் சாசனம் எழுதி வைத்தார். அதன்படி மேற்படி கிருஷ்ணசாமியின் இறப்பிற்கு பின்னிட்டு தன் சொந்த சுயராஜ்ஜித சொத்தாக

தாவா சொத்தினை 5ம் பிரதிவாதி ஆண்டு அனுபவித்து வருகிறார். தாவா சொத்தினை காலம் சென்ற கிருஷ்ணசாமி சுமார் 25 வருடங்கள் தன் சொந்த சுவாதீனத்தில் ஆண்டு அனுபவித்து வந்தார். மேற்படி தாவா சொத்திற்கு முன் அனுபவ பாத்தியஸ்தர் என்ற முறையில் சுயராஜ்ஜித சொத்தாக தாவா சொத்து கிருஷ்ணசாமி அவர்களுக்கு பாத்தியப்பட்டது மற்றும் 5ம் பிரதிவாதியும் தான் பிறந்தது முதல் மேஜர் ஆகி தனது தகப்பனாருடன் தாவா சொத்தினை ஆண்டு அனுபவித்து முன் அனுபவ பாத்தியஸ்தர் என்ற உரிமையையும் கொண்டுள்ளார்.

(5.5) மேலும் திருத்தப்பட்ட பிராதில் 12, 13 பாராக்களில் வாதி சொல்லியுள்ள அனைத்து சங்கதிகளும் பொய்யாகும். மேலும் 14ம், 15ம் பாராக்களில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மையென்றும், வாதி தனது 17, 18 ஆம் பத்தியில் சொல்லியுள்ள சங்கதிகள் முற்றிலும் பொய்யானது என்றும், கால வரையறை சட்டப்படி வழக்கு தாக்கல் செய்ய எவ்வித முகாந்திரமும் இல்லை என்றும் மற்றும் தாவா சொத்திற்கு எவ்வித வழக்கு மூலமும் ஒருபோதும் எழவில்லை என்றும் தாவா சொத்தில் வாதிகள் உரிமை கோர எவ்வித முகாந்திரமும் அருகதையும் அற்றவர் என்றும் இந்த பிரதிவாதி தெரிவிக்கிறார். மேலும் தாவா சொத்தினை 1981 ஆம் வருடம் கிரயம் பெற்றது குறித்து அன்றைய தேதியில் 5 நபர்கள் மீது கிரயம் ஆனது பெயரளவிற்கு என்றும் லேட் கிருஷ்ணசாமி மட்டுமே தாவா சொத்தின் முழு அனுபவ பாத்தியஸ்தர் என்று விளம்புகை மற்றும் முன் அனுபவ பாத்தியம் குறித்து வழக்கு தொடுக்க உள்ளார் எனவும் இந்த எதிருரையுன் மூலம் அதற்கான உரிமைகளை பதிவு செய்கிறார். மேலும் வாதிகளுக்கு முகநக வழக்கு குறித்து அறியாதவர் சொத்தினை அபகரிக்க வேண்டும் என்ற என்னத்தில் தவறான உள்நோக்கில் தாவா தொடர்ந்துள்ளார். குறைந்த நீதிமன்ற கட்டணம் செலுத்தி தாவா சொத்தில் உரிமையும் பரிகாரமும் கோரியுள்ளார். எனவே வாதி தாக்கல் செய்துள்ள

தாவாவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**6) வழக்கெழு வினாக்கள்:**

வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரை மற்றும் ஆவணங்கள் மற்றும் பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை பரிசீலனை செய்யப்பட்டு இவ்வழக்கில் ஆய்வுக்காக கீழ்க்கண்ட எழு வினாக்கள் வனையப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| 1. | Whether the plaintiff is entitled for the relief of partition as prayed for? |
| 2. | To what other relief? |

**7)** வாதி தரப்பில் வாதி 4ம் வாதி சந்திரன் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. 2ம் பிரதிவாதி தரப்பில் 2ம் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு பி.வா.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டது. 5ம் பிரதிவாதி தரப்பில் 5ம் பிரதிவாதி பி.வா.சா.2 ஆகவும் மருதாசலம் பி.வா.சா.3 ஆகவும் விசாரணை செய்யப்பட்டு பி.வா.சா.ஆ.2 முதல் பி.வா.சா.ஆ.16 மற்றும் சா.சா.ஆ.1 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 6, 7 பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை.

**8) வாதி தரப்பு வாதங்கள்**

(8.1) இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. வாதி தரப்பில் 1 முதல் 4 வாதிகளும் அவர்களது சகோதரர் கிருஷ்ணசாமி கடந்த 26.11.1981 அன்று வழக்குச் சொத்தை கூட்டாக கிரயம் பெற்றனர் என்றும் அதில் அனைவருக்கும் தலா 1/5 பங்கு பாகம் உள்ளது என்றும் மேற்படி கிருஷ்ணசாமியின் இறப்புக்குப் பின்னிட்டு பிரதிவாதிகள்தான் அவரது வாரிசுகள் என்றும் வழக்குச் சொத்துக்கு அருகே அவர்களது பூர்வீக சொத்தில் தண்டாயுதபாணி ரைஸ் மில் உள்ளது என்றும் வழக்குச் சொத்து காலி இடமாக

உள்ளது என்றும் வாதிடப்பட்டது. வாதிகள் தரப்பில் மேற்படி சொத்தானது பெயரளவில் மட்டுமே வாதியின் பெயரில் கிரயம் பெறப்பட்டதாகவும் அக்கிரயத்திற்கு கிருஷ்ணசாமியே முழு கிரயத்தொகை செலுத்தியதாகவும் வாதிகள் தங்கள் பங்குக்குரிய தொகையைச் செலுத்தி தங்கள் பங்குகளை பெற்றுக் கொள்வதாக உறுதியளித்தாகவும் பிரதிவாதிகள் செய்துள்ள கட்சி பொய்யானது என வாதிடப்பட்டது. வாதிகள் தரப்பில் வழக்குச் சொத்தில் 4ம் வாதிக்குள்ள பங்கை 4ம் வாதி 2ம் பிரதிவாதியிடம் கடந்த 09.02.1993ல் அடமானம் வைத்தாகவும் அந்த அடமானத்தின் பெயரில் 2ம் பிரதிவாதி மாண்புமிகு பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.15/2010 வழக்கு தாக்கல் செய்ததாகவும் அதனால் 4ம் வாதியின் பங்கை 2ம் பிரதிவாதியால் மறுக்க இயலாது என்றும் வாதிடப்பட்டது. பிரதிவாதிகள் வாதிகளின் உரிமையை ஏற்றுக் கொள்ளாததால் அவர்களால் எதிரிடை அனுபவ பாத்தியமோ ouster கட்சியோ செய்ய இயலாது என்றும் வாதிடப்பட்டுள்ளது. வாதிகள் தரப்பில் உரிய சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் தங்கள் வழக்கை நிரூபித்துள்ளதால் வாதிகளுக்கு வழக்குப் பரிகாரம் கிடைக்கத்தக்கதென வாதிடப்பட்டது.

(8.2) வாதி தரப்பில் தங்கள் தரப்பை நிரூபிக்க கீழ்க்கண்ட மாண்புமிகு உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற மேற்கோள்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

*1. 2023 (4) CTC 9 In the Hon'ble High Court of Madras – Shanthi and Others Vs. K.Senthil Kumar*

*2. 2025 (6) CTC 597 In the Hon'ble High Court of Madras –M.Gagan Bothra and Oth–ers Vs.Balamanian*

*3. 2017 (1) CTC 24 In the Hon'ble High Court of Madras – S.Nirmala Vs.Kanniammal and Others.*

*4. 2023 (5) CTC 186 In the Hon'ble High Court of Madras – M.Sekaran (Died) by Lhs*

***Vs.Palaniammal and Others***

***5. CDJ 1973 SC 424 In the Hon'ble Supreme Court of India – Kailash Rai Vs Jai Jai Ram and Others.***

(8.3) 2ம் பிரதிவாதி தரப்பில் எழுத்துப்பூர்வமான வாதம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2ம் பிரதிவாதி தரப்பில் 2ம் பிரதிவாதியும் கிருஷ்ணசாமியும் சேர்ந்துதான் வழக்குச் சொத்தைக் கிரயம் பெற்றனர் என்றும் வாதிகள் பெயர் கிரய ஆவணத்தில் பெயரளவிற்கே சேர்க்கப்பட்டது என்றும் வாதிகள் கிரயத் தொகையில் துளிகூட கொடுக்கவில்லை என்றும் கிருஷ்ணசாமிதான் வழக்குச் சொத்தில் முழு சுவாதீனம் பெற்று அதனை பராமரித்து வந்தார் என்றும் வா.சா.ஆ.3 அடமானப் பத்திரத்தில் 2ம் பிரதிவாதி கையொப்பமிடவில்லை என்றும் வா.சா.ஆ.5 பொது அதிகார ஆவணத்தில் கிருஷ்ணசாமி கையொப்பமிடவில்லை என்றும் அதனால் வா.சா.ஆ.3 அடமானப் பத்திரமும் வா.சா.ஆ.5 பொது அதிகார ஆவணமும் நடைமுறைக்கு வராத பெயரளவிலான ஆவணங்கள் என்றும் வாதிடப்பட்டது.

(8.4) 5ம் பிரதிவாதி தரப்பில், எழுத்துப்பூர்வமான வாதம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதிகள் தங்கள் வழக்குரையில் வழக்குமூலத்தைக் குறிப்பிட்டு கூறாததால் வழக்குரை நிராகரிக்கத்தக்கது என்றும் கிரய பிரதிபலன் குறிப்பிடப்படவில்லை என்றும் கிரய பிரதிபலன் எவ்வாறு செலுத்தப்பட்டது என்றோ வாதிகள் அச்சமயம் என்ன தொழில் செய்தனர் என்றோ குறிப்பிடவில்லை என்றும் வாதிகள் ஒருபோதும் வழக்குச் சொத்தில் அனுபவத்தில் இருந்ததில்லை என்றும் கிருஷ்ணசாமிதான் வழக்குச் சொத்தின் அனுபவத்தில் இருந்து தன் சொந்த செலவில் மதில்சுவர் மற்றும் களம் அமைத்து மாடர்ன் ரைஸ் மில் உருவாக்க முற்பட்டு வந்தார் என்றும்

கிருஷ்ணசாமி இறப்புக்குப் பின்னிட்டு 5ம் பிரதிவாதி வழக்குச் சொத்தில் அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றும் வாதிடப்பட்டது. 5ம் பிரதிவாதி தரப்பில் வாதிகள் கோரிய பட்டா மாறுதலுக்கு எதிராக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டதாகவும், அதனை ஏற்றுக் கொண்டே அரசு தரப்பில் பதில் ஏதும் அளிக்கப்படவில்லை எனவும் பட்டா மாறுதல் அசல் வழக்கு நிலுவைக்காகதான் மறுக்கப்பட்டதாக பொய்யாகக் குறிப்பிடப்பட்டுள்ளது எனவும் அசல் கிரய ஆவணம் பிரதிவாதியிடம் இருப்பதாக வாதிகளே ஒப்புக் கொண்டுள்ளனர் எனவும் வாதிடப்பட்டது. 5ம் பிரதிவாதி தரப்பில் வாதிகளுக்கு வழக்கின் அடிப்படை விவரங்கள் தெரியாது எனவும் வழக்குச் சொத்தை வாங்க அவர்களுக்கு அப்போது நிதி ஆதாரம் இருந்ததாகக் காட்டும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யாததால் அவர்களுக்கு அச்சமயம் அதற்கான நிதி ஆதாரம் இல்லை எனத் தெரிய வருவதாகவும் 3ம் வாதி அரசு அலுவலர் என்பதால் சொத்து வாங்க உரிய அனுமதி பெற்றதாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை எனவும் 4ம் வாதி அடமானத்தைத் திருப்ப எந்த நடவடிக்கையும் எடுக்காததால் அது பெயரளவிலானது எனத் தெரிய வருவதாகவும் வாதிகளுக்கு வழக்குச் சொத்தில் பாகம் கோர உரிமை ஏதும் இல்லை எனவும் அதனால் வழக்கு தள்ளுபடிக்குரியது எனவும் வாதிடப்பட்டது.

(8.5) 6, 7 பிரதிவாதிகள் தரப்பில் 5ம் பிரதிவாதியின் வாதம் அவ்வாறே ஏற்றுக் கொள்ளப்பட்டது.

(8.6) பிரதிவாதிகள் தரப்பில் தங்கள் தரப்பை நிரூபிக்க கீழ்க்கண்ட மாண்புமிகு உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற மேற்கோள்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

*1)* ***2023 (4) CTC 9*** – In the Hon'ble High Court of Madras Shanthi and Others Vs.

K.Senthil Kumar

2) ***2017 (1) CTC 24 –*** In the Hon'ble High Court of Madras – S.Nirmala Vs. Kanni–ammal and Others.

3) ***2023 (5) CTC 186*** – In the Hon'ble High Court of Madras – M.Sekaran (Died) and Others Vs. Palaniammal and Others.

**9) <u>எழுவினா 1–ற்கான தீர்வு:</u>**

(9.1) இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. இவ்வழக்கில் மேற்படி கிருஷ்ணசாமி இறந்துவிட்டார் என்பதும் வழக்குச் சொத்து வா.சா.ஆ.1 ஆவணப்படிதான் கிரயம் பெறப்பட்டது என்பதும் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாகும். இவ்வழக்கானது வாதிகளுக்கு வழக்குச் சொத்தில் பங்கு உள்ளதா என்பதைத் தீர்மானிக்கவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதி மேற்படி கிருஷ்ணசாமியின் வாரிசோ, மனைவியோ அல்ல என ஆட்சேபிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், எவ்வாறாக எடுத்துக்கொண்டாலும் கிருஷ்ணசாமியின் அனைத்து வாரிசுகளும் வழக்கில் தரப்பினர்களாக உள்ளதாகவே காண முடிகிறது. எனவே 1ம் பிரதிவாதி கிருஷ்ணசாமியின் மனைவி என்ற முறையில் வாரிசா என்பதை இவ்வழக்கில் தீர்மானிக்க தேவையில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(9.2) வழக்குச் சொத்தைக் கிரயம் பெற்ற வா.சா.ஆ.1 கிரய சாசனத்தை பரிசீலிக்கும்போது அதில் 1 முதல் 4 வாதிகளும் இறந்த கிருஷ்ணசாமியும் ஒரு அருணாச்சல கவுண்டர் என்பவரிடம் கடந்த 26.11.1981 அன்று வழக்குச் சொத்தை கிரயம் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அக்கிரயசாசனத்தில் கிரயத் தொகையான ரூ.750/–ஐ கிரயம் கொடுப்பவர் இறந்த 1ம் வாதியான K.N.வடிவேலு

என்பவரிடமிருந்து பெற்றுக் கொண்டு 1 முதல் 4 வாதிகள் மற்றும் கிருஷ்ணசாமி ஆகிய ஐவரிடமும் வழக்குச் சொத்து சுவாதீனத்தை ஒப்படைத்ததாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி கிரய சாசனம் பத்திர எண் 1264/1981 ஆக முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி கிரய சாசனம் வாதி தரப்பு வழக்கிற்கு சாதகமாக அமைந்துள்ளது.

(9.3) பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி கிரய சாசனம் 1 முதல் 4 வாதிகளின் பெயரை பெயரளவிலேயே குறிப்பிட்டுள்ளது என்றும் கிரயத் தொகையை முழுமையாக கிருஷ்ணசாமிதான் செலுத்தினார் என்றும் கட்சி செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி கட்சியை நிரூபிக்கும் கடமை இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 101, 102, 103–படி அக்கட்சியை செய்துள்ள பிரதிவாதிகளையே சாரும்.

(9.4) இந்திய ஒப்பந்தச் சட்டம் 1872 பிரிவு 2(d)படி குறிப்பிடப்பட்டுள்ள பிரதிபலனுக்கான விளக்கத்தில் பிரதிபலனை மூன்றாம் நபர்கூட வழங்கலாம் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே கிரயம் பெறும்போது ஐவரில் ஒருவர் பணம் செலுத்தி ஐவர் பெயரிலும் கிரயம் பெற்றிருந்தாலும் அச்சொத்து ஐவருக்கும் உரியதாகவே கருதப்படும்.

(9.5) 5ம் பிரதிவாதி தன்னை பி.வா.சா.2 ஆக விசாரித்துக்கொண்டபோது தன் மூலம் 26.10.1981 தேதியிட்ட ஒரு உறுதிமொழிப்பத்திரத்தை குறியீடு செய்ய முயன்றார். அந்த உறுதிமொழிப்பத்திரத்தின்படி தன் தந்தையான கிருஷ்ணசாமிக்கு வழக்குச் சொத்தில் முழு உரிமை இருப்பதாக சாட்சியம் அளிக்க முயன்ற நிலையில் அந்த ஆவணம் முறையான முத்திரைத்தாளில் எழுதப்படாமலும், பதிவு செய்யப்படாமலும் இருந்ததால் பதிவுச் சட்டம் 1908 பிரிவு

17ன்படி ஒரு சொத்து மீது உரிமையை உண்டாக்கும் ஆவணம் முறையாக பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்ற விதிக்கு எதிராக அமைந்திருப்பதாகக் கண்டு மேற்படி ஆவணம் குறியீடு செய்ய இயலாத மற்றும் சாட்சியமாக ஏற்றுக் கொள்ள இயலாத ஆவணம் என இந்நீதிமன்றம் தீர்மானித்தது. பிரதிவாதிகள் தரப்பில் கிரயத் தொகை முழுமையும் கிருஷ்ணசாமிதான் செலுத்தினார் என்பதைக் காட்டும்விதமாக எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை.

(9.6) பிரதிவாதிகள் தரப்பில் வாதிகள் வழக்குச் சொத்து கிரயம் பெறப்பட்டபோது கிரயத் தொகை செலுத்த நிதி ஆதாரம் இருந்ததாக ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என வாதிட்டனர். ஆனால் வா.சா.ஆ.1 கிரய சாசனம் வாதிகளுக்கு ஆதரவாக உள்ளதால் அவர்கள் அவ்வாறு நிதி ஆதாரம் காட்ட தேவை எழவில்லை என இந்நீதிமன்றம் காண்கிறது. மேற்படி கிரயத்தொகையை கிருஷ்ணசாமிதான் முழுமையாக செலுத்தினார் என பிரதிவாதிகள் தரப்பில் அளிக்கப்பட்ட வாய்மொழி சாட்சியங்கள் ஆவண சாட்சியமான வா.சா.ஆ.1 கிரய சாசனத்திற்கு எதிராக உள்ளதால் இந்திய சாட்சிய சட்டப்படி அவற்றை ஏற்றுக் கொள்ள இயலாது. பிரதிவாதிகள் தரப்பில் வாதிகள் மூன்று ஆண்டுக்குள் தங்கள் பங்குக்கான தொகையை கொடுப்பதாக உறுதி அளித்தும் அதனை கொடுக்கத் தவறியதாக கட்சி செய்துள்ள நிலையில் அதன் மீது கிருஷ்ணசாமியோ பிரதிவாதிகளோ ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என எவ்வித விளக்கமும் அளிக்கவில்லை.

(9.7) 2ம் பிரதிவாதி வழக்குச் சொத்து தனக்கும் கிருஷ்ணசாமிக்கும் தனித்து பாத்தியப்பட்டதென கட்சி செய்த நிலையில் அதற்கு ஆதரவாக எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. 5ம் பிரதிவாதி வழக்குச் சொத்து தனக்கு கிருஷ்ணசாமி எழுதிய உயில்படி பாத்தியம் என கட்சி செய்துள்ளநிலையில்

அத்தகைய உயில் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. இது உயிலுக்கு எதிராக எதிரிடை அனுமானத்திற்கு வழிவகுக்கிறது. மேலும் 5ம் பிரதிவாதி தன் குறுக்கு விசாரணையில் தன் கட்சிக்கு எதிராக வழக்குச் சொத்து 2 முதல் 7 பிரதிவாதிகளுக்கு பாத்தியம் என முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

(9.8) பொதுவாக ஒரு கூட்டுரிமையாளர் ஒரு சொத்தின் அனுபவத்தில் இருந்தால் அது அவர் அனைத்து கூட்டுரிமையாளர்கள் சார்பில் அனுபவத்தில் இருப்பதாகவே எடுத்துக்கொள்ளப்படும். பிரதிவாதிகள் கட்சி செய்தபடி கிருஷ்ணசாமிதான் வழக்குச் சொத்தில் அனுபவத்தில் இருந்துவந்தார் என எடுத்துக்கொண்டால்கூட அவர் பிற கூட்டுரிமையாளர்களான வாதிகள் சார்பாகவும் சேர்த்துதான் அனுபவத்தில் இருந்ததாக கருத இயலும். 5ம் பிரதிவாதி தரப்பில், அனுபவத்தைக் காட்ட தாக்கல் செய்யப்பட்ட பி.வா.சா.ஆ.2, பி.வா.சா.ஆ.3, பி.வா.சா.ஆ.4 மற்றும் பி.வா.சா.ஆ.6 முதல் பி.வா.சா.ஆ.11 ஆகிய ஆவணங்களில் கிருஷ்ணசாமி பெயர் இடம்பெறவில்லை. பி.வா.சா.ஆ.16 புகைப்படங்களுக்கு இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65B படி உரிய சான்று ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே வழக்குச் சொத்து கிருஷ்ணசாமியின் தனித்த சுவாதீனத்தில் இருந்ததாகவோ அதில் அவர் தனி செலவில் மதில்சுவர் மற்றும் களம் அமைத்ததாகவோ எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என இந்நீதிமன்றம் காண்கிறது.

(9.9) எனவே மேற்படி ஆவண பரிசீலனையிலிருந்து கிருஷ்ணசாமி வழக்குச் சொத்தில் தனித்த சுவாதீனத்தில் இருந்ததாக பிரதிவாதிகள் நிரூபிக்கத் தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் காண்கிறது. 5ம் பிரதிவாதி தான் வழக்குச் சொத்து பொறுத்து உரிமை விளம்புகை, எதிரிடை அனுபவ பாத்தியம் ஆகியவை கோரி தனி வழக்கு தாக்கல் செய்யப்போவதாக கட்சி செய்துள்ளநிலையில்

அதனை நாளதுதேதிவரை தாக்கல் செய்யவில்லை என தன் சாட்சியத்தில் ஒப்புக் கொண்டுள்ளார். மேலும் மேற்கண்டவாறு உரிமை கோருவதாக இருந்தால் 5ம் பிரதிவாதி அதனை இவ்வழக்கிலேயே கோரியிருக்க வேண்டும். மேலும் எதிரிடை அனுபவ பாத்தியம் மற்றும் ouster ஆகிய கட்சிகளை பிரதிவாதிகள் யாரும் குறிப்பிட்டு இவ்வழக்கில் கோரவில்லை. அவ்வாறான கட்சிகளை கோருவதாக இருந்தால் முதலில் வாதிகளின் உரிமையை ஒப்புக் கொண்டு அதற்கு எதிராக இருப்பதாகவே கட்சி செய்ய வேண்டும். ஆனால் இவ்வழக்கில் வாதிகளின் உரிமை ஒப்புக்கொள்ளப்படாததால் அக்கட்சிகளுக்கு இடம் இல்லை.

(9.10) 2ம் பிரதிவாதி வா.சா.ஆ.3 அடமானப் பத்திரம் அடிப்படையில் அ.வ.எண்.15/2010 வழக்கு தாக்கல் செய்ததாக அவ்வழக்கில் பதிவேடு வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு பற்றியும் அடமானம் பற்றியும் வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளதால் அதுகுறித்து பிரதிவாதிகள் எழுப்பிய ஆட்சேபணை நிராகரிக்கப்படுகிறது. வா.சா.ஆ.3 அடமானப் பத்திரத்தில் 4ம் வாதி வழக்குச் சொத்தில் தனது பங்கை அடமானம் கொடுத்ததாக எழுதியுள்ளதையும் அதன் அடிப்படையில் 2ம் பிரதிவாதி அ.வ.எண். 15/2010 வழக்கை தாக்கல் செய்துள்ளதையும் காண முடிகிறது. மேற்படி அடமானம் மற்றும் வழக்கு பற்றி கேள்வி எழுப்பியபோது 2ம் பிரதிவாதி தனக்கு ஞாபகம் இல்லை என்று பதில் அளித்தாரே தவிர அதனை மறுக்கவில்லை. 2ம் பிரதிவாதி 4ம் வாதியின் பங்கை ஒப்புக்கொண்டு அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளபோது அதனை இவ்வழக்கில் மறுப்பது முரணாக அமைகிறது. 2ம் பிரதிவாதி தரப்பில் மேற்படி வழக்கில் 4ம் வாதி மேற்படி அடமானத்தை மறுத்து எதிர்வழக்குரை தாக்கல் செய்ததாக கேள்வி எழுப்பியதிலிருந்து 2ம் வாதி அவ்வழக்கை ஒப்புக்கொண்டதாக இந்நீதிமன்றம்

கருதுகிறது. மேற்படி எதிர்வழக்குரையில் 4ம் வாதி தன் அடமானத்தை மறுத்ததாக 2ம் பிரதிவாதி தரப்பில் குறிப்பிடப்பட்டதே தவிர அவர் தன் பங்கை மறுத்ததாக குறிப்பிடவில்லை. மேற்படி வழக்கின் எதிர்வழக்குரையை 2ம் பிரதிவாதி தரப்பில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை.

(9.11) மேற்படி சாட்சிய மற்றும் ஆவண பரிசீலனையிலிருந்து பிரதிவாதிகள் தங்கள் தரப்பு வழக்கை நிரூபிக்கத் தவறிவிட்டனர் என்றும் வாதிகள் வழக்குச் சொத்தில் 1 முதல் 4 வாதிகளுக்கு தலா 1/5 பங்கு என 4/5 பங்கு இருப்பதை நிரூபித்துவிட்டனர் என்றும் அதனால் வாதிகளுக்கு அவர்கள் கோரியவாறு வழக்குச் சொத்து 4/5 பங்குக்கான பாகப்பிரிவினை கிடைக்கத்தக்கதென இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. இந்த எழுவினா வாதிக்கு ஆதரவாக தீர்மானிக்கப்படுகிறது.

10) <u>எழுவினா 2–ற்கான தீர்வு:</u>

எழுவினா 1 வாதிகளுக்கு ஆதரவாக தீர்வு காணப்பட்டுள்ளதால் மேற்கொண்டு வாதிக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்று முடிவு செய்து மேற்கண்ட எழுவினாவிற்கு தீர்வு காண்கிறது.

**முடிவில், வழக்குச் சொத்துகளில் 3, 4 வாதிகளுக்கு தலா 1/5 பங்கும், இறந்த 1ம் வாதியின் வாரிசுகளுக்கு கூட்டாக 1/5 பங்கும், இறந்த 2ம் வாதியின் வாரிசுகளுக்கு கூட்டாக 1/5 பங்கும் கிடைக்கத்தக்கதென முதல் நிலைத் தீர்ப்பாணை வழங்கி இவ்வழக்கு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்ததை, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 30ம் நாளான இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

SREENATH M S
Digitally signed by SREENATH M S
Date: 2026.03.30 19:54:41 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

**வாதி தரப்பு சாட்சிகள் :**

வா.சா.1. சந்திரன் (4ம் வாதி)

**வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் :**

| சான்று ஆவண எண் | தேதி | ஆவணங்கள் | தன்மை |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1/ வா.சா.1 | 26.11.1981 | கிரையப்பத்திரம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2/ வா.சா.1 | 15.09.2010 | பொள்ளாச்சி வட்டாட்சியர் வழங்கிய குறிப்பாணை | அசல் |
| வா.சா.ஆ.3/ வா.சா.1 | 09.02.1993 | அடமானப் பத்திரம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.4/ வா.சா.1 | 10.02.1993 | அ.வ.எண்.15/2010 வழக்கின் நீதிமன்ற பதிவேடு | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.5/ வா.சா.1 | 10.02.1993 | பொது அதிகாரப் பத்திரம் | சான்றிட்ட நகல் |

**பிரதிவாதி தரப்பு சாட்சிகள்**

பி.வா.சா.1. மாரியம்மாள் (2ம் பிரதிவாதி)
பி.வா.சா.2. நாச்சிமுத்து (5ம் பிரதிவாதி)
பி.வா.சா.3. மருதாசலம்

**பிரதிவாதிகள் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்**

| சான்று ஆவண எண் | தேதி | ஆவணங்கள் | தன்மை |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.1/ பி.வா.சா.1 | – | பி.வா.சா.1 மாரியம்மாள் ஆதார் அட்டை | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது |
| பி.வா.சா.ஆ.2/ பி.வா.சா.2 | 09.09.1981 | பொன் ஸ்டான்லி ஆண்ட்ரோ வழங்கிய கடிதம் | அசல் |
| பி.வா.சா.ஆ.3/ பி.வா.சா.2 | 09.09.1981 | Detailed Estimation | அசல் |
| பி.வா.சா.ஆ.4/ பி.வா.சா.2 | 09.09.1981 | Blue print | அசல் |
| பி.வா.சா.ஆ.5/ பி.வா.சா.2 | 24.06.1985 | Madras District Municipality Act கீழான விண்ணப்பம் | அசல் |
| பி.வா.சா.ஆ.6/ பி.வா.சா.2 | 22.06.1985 | Boiler Shed மற்றும் குடோன் | அசல் |
| பி.வா.சா.ஆ.7/ பி.வா.சா.2 | 22.06.1985 | Septic tank சம்மந்தப்பட்ட நிழல் வரைபடம் | அசல் |
| பி.வா.சா.ஆ.8/ பி.வா.சா.2 | 19.10.1982 | தொழில்வரி ரசீது | அசல் |
| பி.வா.சா.ஆ.9/ பி.வா.சா.2 | 28.12.1983 | தொழில்வரி ரசீது | அசல் |
| பி.வா.சா.ஆ.10/ பி.வா.சா.2 | 08.03.1985 | தொழில்வரி ரசீது | அசல் |
| பி.வா.சா.ஆ.11/ பி.வா.சா.2 | 06.02.1986 | தொழில்வரி ரசீது | அசல் |
| பி.வா.சா.ஆ.12/ பி.வா.சா.2 | 15.01.2010 | வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் |

| | | | |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.13/ பி.வா.சா.2 | 27.01.2010 | திருப்பப்பட்ட அஞ்சல் உறை | அசல் |
| பி.வா.சா.ஆ.14/ பி.வா.சா.2 | 18.01.2010 | பதிவஞ்சல் ஒப்புகை அட்டை | அசல் |
| பி.வா.சா.ஆ.15/ பி.வா.சா.2 | 16.01.2010 | Certificate of posting ரசீது அதனுடன் கூடிய திருப்பப்பட்ட தபால் உறை | அசல் |
| பி.வா.சா.ஆ.16/ பி.வா.சா.2 | 17.09.2025 | தாவா சொத்தின் புகைப்படங்கள் | அசல் |

**மூன்றாம் நபர் தரப்பு சான்றாவணங்கள்**

| **சான்று ஆவண எண்** | **தேதி** | **ஆவணங்கள்** | **தன்மை** |
|---|---|---|---|
| சா.சா.ஆ.1/ பி.வா.சா.3 | – | பி.வா.சா.3 ஆதார் அட்டை | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது |

SREENATH M S

Digitally signed by SREENATH M S
Date: 2026.03.30 19:54:53 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி

---------------------------------------------

**<u>அசல் / வரைவு தீர்ப்புரை</u>**

அ.வ.எண்.736/2010

நாள் : 30.03.2010

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

பொள்ளாச்சி

---------------------------------------------